

**රාජ්‍ය පාලනය, යුක්තිය සහ සිවිල් ආරක්ෂණය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාව**
වෙත යොමු කරන ලද
2023 හා 2024 වර්ෂ සඳහා ආරක්ෂක අමාත්‍යාංශයේ වාර්ෂික කාර්ය සාධන වාර්තා
2022 හා 2023 වර්ෂ සඳහා ජාතික ගොඩනැගිලි පර්යේෂණ සංවිධානයේ වාර්ෂික වාර්තා
සම්බන්ධයෙන්
රාජ්‍ය පාලනය, යුක්තිය සහ සිවිල් ආරක්ෂණය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ වාර්තාව
පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද්දේ
**රාජ්‍ය පාලනය, යුක්තිය සහ සිවිල් ආරක්ෂණය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ සභාපති**
**ගරු (වෛද්‍ය) නජිත් ඉන්දික මහතා, පා.ම. විසිනි**
**2025 ඔක්තෝබර් මස 23 වැනි බ්‍රහස්පතින්දා**

**ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு**
**ஆற்றுப்படுத்தப்பட்ட**
2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான பாதுகாப்பு அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை
அறிக்கைகள்
2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின்
ஆண்டறிக்கைகள்
தொடர்பான
ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின்
அறிக்கையானது
**ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர்**
**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க, பா.உ அவர்களால்**
**பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.**
**2025 ஒக்தோபர் 23 ஆம் திகதி வியாழக்கிழமை**

Report of the
**Sectoral Oversight Committee on Governance, Justice and Civil Protection**
regarding the
Annual Performance Reports of the Ministry of Defence for the years 2023 & 2024
Annual Reports of the National Building Research Organization for the years 2022 & 2023
referred to the
Sectoral Oversight Committee on Governance, Justice and Civil Protection
Presented to Parliament by
**The Hon. (Dr.) Najith Indika, M.P.**
**Chair of the Sectoral Oversight Committee on Governance, Justice and Civil Protection**
**Thursday, 23 October 2025**

**குழுவின் அறிக்கை**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆந் திகதி பாராளுமன்றத்தில் கூடிய ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவால் பின்வரும் செயலாற்றுகை/ வருடாந்த அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன.

- **2024 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை** (2025.08.05 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

- **2023 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை** (2024.07.10 ஆந் திகதி ஒன்பதாவது பாராளுமன்றத்தில் தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், 2025.05.02 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக பத்தாவது பாராளுமன்றத்தின் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.)

- **2023 ஆம் ஆண்டுக்கான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை** (2025.07.25 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

- **2022 ஆம் ஆண்டுக்கான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை** (2023.11.23 ஆந் திகதி ஒன்பதாவது பாராளுமன்றத்தில் தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், 2025.05.02 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக பத்தாவது பாராளுமன்றத்தின் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.)

**பங்குபற்றிய குழு உறுப்பினர்கள்**

கௌரவ (டாக்டர்) நஜித் இந்திக்க, பா.உ (தவிசாளர்)
கௌரவ முஜிபுர் ரஹுமான், பா.உ.
கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம், பா.உ.
கௌரவ எம்.கே. எம். அஸ்லம், பா.உ.
கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ, பா.உ.
கௌரவ தர்ம்பிரிய விஜேசிங்ஹ, பா.உ.,
கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார, பா.உ.

**பங்குபற்றிய குழு உறுப்பினர் அல்லாத பாராளுமன்ற உறுப்பினர்கள்:**

மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர, பா.உ., பாதுகாப்பு பிரதி அமைச்சர்

திருமதி சூலா ஹேரத், உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்), குழுவின் செயலாளர்

**பங்குபற்றிய அதிகாரிகள்**

**பாதுகாப்பு அமைச்சு**

திரு. காமினி மகாகமகே, மேலதிக செயலாளர் (பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் கொள்கை)
திரு. டி.எம்.எஸ். திசாநாயக்க, மேலதிக செயலாளர் (பாதுகாப்பு சேவைகள்)
திரு. ஹர்ஷ விதானாராச்சி, மேலதிக செயலாளர் (நிர்வாகம்) உட்பட உத்தியோகத்தர்கள்

**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்**

பேராசிரியர் ஆசிரி கருணாவர்தன, பணிப்பாளர் நாயகம்
திருமதி. குமுது ரந்தேனியா, பணிப்பாளர் (நிதி)

மேற்படி அனைத்து அறிக்கைகள் தொடர்பாகவும் குழுவில் கலந்துரையாடப்பட்டதோடு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனுக்காகவும் ஒட்டுமொத்த மக்களின் நன்மைக்காகவும் குறித்த நிறுவனங்கள் செயலாற்றுவதற்கான ஆலோசனைகள் மற்றும் விதப்புரைகள் குழுவினால் வழங்கப்பட்டதோடு, அந்த அறிக்கைகளில் கணிசமான குறைபாடுகள் காணப்படாமையினால், அது தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குழு தீர்மானித்தது.

**குழுவின் தீர்மானங்கள்**

பரிசீலனை செய்த பின்னர், ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, பாராளுமன்றத்தினால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மேற்கண்ட செயலாற்றுகை/ வருடாந்த அறிக்கைகளுக்கு இணங்கியதோடு, அது தொடர்பாக தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையை குழுவின் தவிசாளர் கௌரவ (டாக்டர்) நஜித் இந்திக்க, பா.உ, 2025 ஒக்தோபர் மாதம் 23 ஆந் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானித்தது.